RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சங்க இலக்கியங்களில் உணவுக்கனிகள்

த. மகேஷ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளி, கல்லாறு, மேட்டுப்பாளையம் தமிழ்நாடு, இந்தியா.

# Sanga Ilakkiyaththil Unavukkanikal

T. Makesh [a, *]

[a] Department of Tamil, Satchidananda Jothi Nikethan International School, Kallar, Mettupalayam, Tamil Nadu, India

* Corresponding Author: makesht@gmail.com

Received: 05-04-2024
Revised: 30-06-2024
Accepted: 11-07-2024
Published: 30-07-2024

Check for updates

**ABSTRACT**

Food is one of the basic needs of man. Food is essential for survival. The Manimekalai and the Purananuru mention that those who gave food were the givers of life. Thus, food is of many kinds. Everything that satisfies hunger is called food. The people of the Sangam Age ate good food and lived happily for many years. Organic foods are found in abundance in the foods that led to their prosperous life. Among them, fruits occupy the most significant place. In this way, this paper is a study of the fruits used as food fruits like Thudari fruit, Kalampazha, Karai fruit, Gooseberry, Jamun and Jackfruit which were used as food fruits in the life of the people of the Sangam Age.

**Keywords:** Sangam Age, Fruits, Taste, Pulse fruit, Kalam fruit, Karai fruit, Gooseberry, Jamun fruit, Jackfruit.

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்வின் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்வன. தமிழர்தம் வாழ்வின் எல்லாநிலைகளையும் காட்சிகளாக நம் முன் நிறுத்துவன. அவ்வகையில் தமிழரின் உணவு, உடை, இருப்பிடம், பழக்கவழக்கங்கள் என அனைத்தையும் எடுத்துக்கூறும் தன்மையன சங்க இலக்கியப் பாடல்கள். இத்தகைய சங்க இலக்கியப்பாடல்கள் தமிழர்களின் பல்வேறு வகைப்பட்ட உணவு வகைகளை எடுத்துக்கூறுகின்றன. அவற்றில் உணவாகப் பயன்படும் கனிகளைப் பற்றி எடுத்துக்கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## உணவுக்கனிகள்

தமிழ் மக்கள் உண்டு மகிழ்ந்த கனிகளாகத் துடரிப்பழம், களாம்பழம், காரைப்பழம், நெல்லிக்கனி, நாவல்பழம், பலாப்பழம் ஆகியன அமைந்துள்ளன.

## துடரிப்பழமும் களாம்பழமும்

துவர்ப்புச் சுவையுடைய துடரிப்பழம் மற்றும் களாம்பழம் குறித்துப் புறநானூற்றுப் பாடல் ஒன்று பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"புளிச்சுவை வேட்ட செங்கண் ஆடவர்

தீம்புளிக் களாவொடு துடரி முனையின்

மட்டுஅறல் நல்யாற்று எக்கரி ஏறி

கருங்கனி நாவல் இருந்து கொய்து உண்ணும்

பெரும் பெயர் ஆதி பிணங்கு அரில் குடநாட்டு" (புறம் - 177 - பா.அ - 8-12)

என வரும் புறநானூற்றுப் பாடல் மல்லிகிழான் காரியாதியைப் போற்றி ஆவூர் மூலங்கிழார் பாடியது ஆகும். மல்லி (சீவில்லிபுத்தூர்) நாட்டை ஆண்ட மல்லிகிழான் நாட்டு கொண்டாட்டத்தை விளக்குகிறது இப்பாடல். அவன் நாட்டில் வாழும் ஆடவர் புளிப்பு சுவையுடைய கள்ளினை உண்டு கண் சிவந்தது. அப்புளிப்பு சுவை குறையாமல் இருக்க களாம் பழத்தினையும் துடரிப் பழத்தினையும் உண்கின்றனர் என்கிறது பாடல்.

தொடர்ந்து அமைதலைத் "தொடரி' என்று அழைக்கும் மரபு சங்க இலக்கியங்களில் உண்டு.

"வேரு முதலுங் கோடு மொராங்குத்

தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்

கீழ்தாழ் வன்ன வீழ்கோட் பலவின்" (குறுந் - 257 பா.அ - 1-3)

என்றும்,

"புதல்மிசை நறுமலர் கவின்பெறத் தொடரிநின்" (ஐங்கு - 463 பா.அ - 1)

என்றும்,

"மனை விளக் குறுத்து மாலை தொடரி" (அகம் - 86 பா.அ - 4) என்றும்

இடம்பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. தொடர்ந்து ஒரு ஒழுங்கோடு அமைக்கப்படுவது "தொடரி' என்று அழைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே தொடர்ந்து இலைக்கொன்றாகக் காய்த்து கனியும் கனி "தொடரிக்கனி' எனப்பட்டது. ஒகரம் உகரமாவது தமிழ் மரபில் பேச்சு வழக்கில் இயல்பாகக் காணப்படக்கூடிய ஒன்று.

செடி - களாம்பழம், கொடி - துடரிப் பழம், மரம் - நாவல் பழம் ஆகிய பழங்களைக் (புளிப்பும் இனிப்பும் கலந்த) கள்ளுண்டு களித்த ஆடவர்கள் உண்கின்றனர் எனும் புறநானூற்றுப் பகுதியில் இடம்பெறும் "துடரிப்பழ'த்தின் பொருளை மேற்குறித்தவாறு அறியமுடிகிறது.

## காரைப்பழம்

துவர்ப்பும் இனிப்பும் கலந்த காரைப்பழத்தை மக்கள் உண்டுள்ள செய்தியைப் புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.

“முள் கால் காரை முது பழன் ஏய்ப்பத்

தெறிப்ப விளைந்த தீம் கந்தாரம்

நிறுத்த ஆயம் தலைச்சென்று உண்டு” (புறம் - 258 - பா.அ - 1-3)

‘காந்தாரம்’ என்பது ஒருவகைக் கள். அது மக்கள் விரும்பியுண்ணும் முதிர்ந்த காரைப்பழம் போல நுரை விட்டுக்கொண்டு விளைந்திருக்கும். இந்த வீரன் ஆனிரைகளைக் கவர்ந்துகொண்டுவந்து இந்தக் கள்ளுக்கு விலையாக வழங்குவான். கள்ளுண்ணும்போது பச்சையாகச் சுடப்பட்ட கறியை உண்பான். அதன் நிணம் (எண்ணெய்ப்பசை) ஒட்டிக்கொண்டிருக்கும் எச்சில் கை காய்வதற்கு முன்பு வில்லை எடுத்துக்கொண்டு பகைவர் நாட்டுக்குச் செல்வான். அவன் இளந்தாடி முளைக்கும் காளை. மற்றவர்கள் ஒருமுறை ஆர அமர உண்டு முடிப்பதற்கு முன்பாக மிகப் பெரிய ஆனிரைக் கூட்டத்தைக் கொண்டுவந்து ஊருக்கு வெளியே நிறுத்துவான். உங்களிடம் உள்ள முதிர்ந்த கள்ளை உடைய சாடியை

யாருக்காகவும் திறக்காதீர்கள். கள்ளை விரும்பும் அவன் எரிந்து விழவும் கூடும் என்பது இப்பாடலின் பொருள். இதில் காரைப்பழத்தை விரும்பி உண்டுள்ள செய்தியை அறிய முடிகிறது.

## நாவல்பழம்

சங்ககாலம் முதல் இக்காலம் வரையில் அனைத்து மக்களாலும் விரும்பி உண்ணப்படும் பழமாக இருப்பது நாவல்பழம் ஆகும். பெரும்பெயர் ஆதி என்ற மன்னனுடைய நாட்டிலுள்ள மக்கள் மணல் குவிந்து கிடக்கும் மணல் மேட்டில் ஏறி நின்று நாவற்பழத்தை கொய்து உண்டனர் என்ற செய்தியை,

"கருங்கனி நாவலி லிருந்து கொய் துண்ணும்

பெரும்பெய ராதி பிணங்களிற் குட நாட்

டெயினர்" (புறம் - 177 - பா.அ - 11-3)

எனவரும் புறநானூற்றுப் பாடலடிகள் தருகின்றன.

## நெல்லிக்கனி

உண்டவரை நீண்டநாள் வாழவைக்கும் ஆற்றல் கொண்டது நெல்லிக்கனி என்ற செய்தியை,

"சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா

தாத னின்னகத் தடக்கிக்

சாத னீங்க வெமக்கீந் தனையே" (புறம் - 91 பா. அ- 9-11)

எனவரும் ஔவையார் பாடிய புறப்பாடல் வழி அறியமுடிகிறது. அதியமான் தனக்குக் கிடைத்த நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல் தமிழ் வளர்க்கும் பெருமாட்டியான ஔவைப்பிராட்டியார் அவர்களுக்குத் தந்த செய்தியை இப்பாடல் குறிப்பிடுகிறது.

## பலாப்பழம்

மலைநாடுகளிலும் மலைப்பகுதிகளிலும் அதிகமாகக் கிடைக்கும் பழம் பலாப்பழம். பலாப்பழம் முக்கனிகளுள் ஒன்றாகத் திகழ்வது. சிறப்புமிக்க பலாப்பழம் சங்க இலக்கியத்தில் அதிகமாகக் குறிப்பிடப்படும் பழம் ஆகும். 50க்கும் மேற்பட்ட இடங்களில் பலாப்பழம் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. அகநானூற்றின் ஒருபாடல்,

"தீம் பழ பலவின் சுளை விளை தேறல்" (அகம் - 182 - பா.அ - 3

என்று குறிப்பிடுகிறது. மிகுந்த சுவை மிக்க பலாச்சுளை என்று பலாப்பழத்தை இவ்வரிகள் குறிப்பிடுகின்றன. அவ்வரி, அகநானூற்றின் மற்றொரு பாடல்,

"தீம் சுளை பலவின் தொழுதி உம்பல்" (அகம் - 357 - பா.அ - 9)

என்று குறிப்பிடுகிறது. இனிய சுவை மிக்க சுளைகளைக் கொண்ட பலாப்பழம் என்று குறிப்பிடுகிறது. புறநானூற்றின் ஒரு பாடல் வரி பலாப்பழத்தின் சிறப்பை எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளது. அவ்வரி,

"தீம் சுளை பலவின் மா மலை கிழவன்" (புறம் - 129 - பா.அ - 4)

என்பதாகும். இனிய சுவைமிக்க சுளைகளை உடைய பலா மரங்களை உடைய தலைவன் என்று பலாப்பழத்தின் சுவையைக் குறிப்பிட்டுப் புலவர் பாடுகிறார்.

இவ்வாறு பல இடங்களிலும் பலாப்பழமும் பலாமரமும் குறிப்பிடப்படுவதில் இருந்து அதன் சுவையை விரும்பி பலரும் அதை உண்டிருந்த செய்தி பெறப்படுகிறது.

## முடிவுகள்

தமிழ்மக்கள் கனிகளை விரும்பி உண்டு வந்தனர் என்ற செய்தி பெறப்படுகிறது. துடரிப்பழம் எனும் புளிப்புச் சுவையுடைய பழத்தை விரும்பி உண்டு வந்த செய்தியைப் பெறமுடிகிறது. நாவல்பழம், களாம்பழம், காரைப்பழம் ஆகிய பழங்களையும் விரும்பி உண்டு வந்த செய்தி பெறப்படுகிறது. மக்கள் விரும்பிய கனிகளில் அதிகமாக விரும்பியது பலாப்பழம் என்ற செய்தி பெறப்படுகிறது. முடிவாக உணவுப்பொருள்களில் கனிகள் மிகுந்த இடத்தைப் பெற்றிருந்ததையும் அதை மக்கள் உண்டு வளமான வாழ்க்கை வாழ்ந்ததையும் இக்கட்டுரைவழி அறியமுடிகிறது.

## References

அகநானூறு மூலமும் உரையும் - சாரதா பதிப்பகம், சென்னை. ஆண்டு : 2010.

புறநானூறு மூலமும் உரையும் - சாரதா பதிப்பகம், சென்னை. ஆண்டு : 2010.

ஐங்குறுநூறு மூலமும் உரையும் - சாரதா பதிப்பகம், சென்னை. ஆண்டு : 2009.

குறுந்தொகை மூலமும் உரையும் - வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. ஆண்டு : 1999.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License